தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
மதுரை வட்டம், மதுரை - 2
சிட் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
<u>ஒப்பந்த அறிவிப்பு எண். 7 /2006-1 /வதொஅ/ நாள்: 11.7.2006</u>

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ) மதுரை அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் அழகர்கோவில் சாலை (தாமரைத் தொட்டி அருகில்) மதுரை-2ல் உள்ள அவரது அலுவலகத்தில் 27.7.2006 அன்று பிற்பகல் 3.00 மணி வரை (அலுவலக கடிகாரப்படி) வரவேற்கப்படுகிறது. கீழ்கண்ட பணிகளுக்கு (இரு உறைகள் முறை) முன் தகுதி காணலுக்கான ஆவணங்கள் மற்றும் முன்வைப்புத் தொகை தனி உறையிட்டது மற்றும் வேலைகளுக்கான சதவீத ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் தனி உறையிட்டு மேலுறையிட்டது (இரு உறைகள் முறை) வரவேற்கப்படுகிறது.

மேற்கண்ட ஒப்பந்த அழைப்பில் முன்தகுதி காணலுக்கான படிவத்தில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கு ஏற்புடைய ஒப்பந்தக்காரர்கள் மட்டும் இத்துறையில் பதிவுபெற்ற மாநில அளவிலான ரூ. 25.00 லட்சத்திற்கு மேல் பண வரம்புடன் கூடிய முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்கள் மட்டும் போட்டிக்கு தகுதியுடைவர்கள் ஆவார்கள்.

| வ. எண் . | வேலையின் பெயர் | உத்தேச மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்த நமூனா விலை ரூ. | ஒப்பந்த படிவம் கிடைக்குமிடம் |
|---|---|---|---|---|---|
| **COMPREHENSIVE ROAD INFRASTRUCTURE DEVELOPMENT PROGRAMME** | | | | | |
| 1. | <u>இரண்டாம் அழைப்பு</u><br><u>மதுரை(நெ) கோட்டம்</u><br>திருச்சி-மதுரை சாலை கி.மீ.446/0-449/4 முடிய அகலப்படுத்துதல் வேலை | 243.00 | 131500 | 5000 + 630 | கோட்டப் பொறியாளர் (நெ) மதுரை |

மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கோட்டப் பொறியாளர் (நெ) மதுரை அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள கணக்குத் தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ) மதுரை அவர்களின் பெயரில் அவர்களது எல்லைக்குட்பட்ட அரசு கருவூலத்தில் கட்டணம் செலுத்தி (திருப்பித் தரப்படமாட்டாது) செலுத்துச் சீட்டுடன் அவ்வலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் 24.7.2006 வரை எழுத்து மூலம் நேரடியாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அவரது ஏஜென்ட் மூலமாகவோ விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி நமூனா விலை மற்றும் விற்பனை வரிக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகையினை ஷெடியூல்டு வங்கிகளிலிருந்து கோட்டப் பொறியாளர் (நெ.) மதுரை பதவி பெயரில் எடுக்கப்பட்ட கேட்புவரை வோலை வடிவத்திலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

தொகை செலுத்த வேண்டிய கணக்குத் தலைப்பு

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி நமுனா ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக விலை ரூ. 5000 | 8658 Highways Suspense Account III other receipt to the credit of the Divisional Engineer (H) Madurai |
| விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக ரூ.630 | 0040 Sales Tax |

ஒப்பந்தப்புள்ளி நமுனாக்கள் பதிவு அஞ்சலிலோ கூரியர் மூலமாகவோ பெற விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் தமது விருப்பத்தினை எழுத்து மூலம் தெரிவிப்பதோடு நமுனாவுக்குரிய கட்டணத்தை மேற்கூறிய முறையில் செலுத்தி அதற்கான ரசீது இணைத்து அனுப்பினால் ஒப்பந்தப்புள்ளி நமுனாக்கள் மேற்கூறிய முறையில் அனுப்பி வைக்கப்படும். இதனால் ஏற்படும் காலதாமதத்திற்கு கோட்டப் பொறியாளர்கள் (நெடுஞ்சாலை) மதுரை எந்தவிதத்திலும் பொறுப்பு ஏற்கமாட்டார்கள்.

மேற்கண்ட பணிகளுக்கு முன் தகுதி காணலுக்கான ஆவணம் மற்றும் பட்டியலிடப்பட்ட சதவீத ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் தபால் மூலமாகவோ, கூரியர் மூலமாகவோ, தனி நபர் மூலமாகவோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ கண்காணிப்புப் பொறியாளர் (நெ). மதுரை - 2 அவர்களின் அலுவலகத்திற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்படுவதற்கான நிர்ணயிக்கப்பட்ட காலமாக 27.7.2006 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் கிடைக்கும்படியாக அனுப்பப்பட்ட வேண்டும். அவ்வாறு உரிய நேரத்தில் பெறப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். கூரியர் அஞ்சல் தனி நபர் ஆகியோர் மூலம் ஏற்படும் காலதாமதத்திற்கு இத்துறை எந்த வகையிலும் பொறுப்பு ஏற்காது.

அதில் முன் தகுதி ஆவணங்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் 27.7.2006 அன்று பிற்பகல் 3.15 மணி அளவில் வருகை தந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட முகவர்கள் முன்னிலையில் திறக்கப்படும். தேர்வு செய்யப்பட்ட பின்னர் விலைப்புள்ளி ஆவணங்கள் திறக்கப்படுவதற்கான தேதி, தகுதி உடைய ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டும் பின்னர் அறிவிக்கப்பட்டு திறக்கப்படும். மற்றவர்களின் விலைப்புள்ளி ஆவணங்கள் திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும்.

குறிப்பு :

1. இத்துறையில் மாநில அளவில் முதல் வகுப்பில் பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே ஒப்பந்த நமுனா வழங்கப்படும்.
2. மைய சுடுகலவை இயந்திரம் மற்றும்பேவர் பினிசர் இயந்திரம் சொந்தமாக வைத்திருந்து இத்துறையில் முதல் வகுப்பு மாநில அளவில் பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே ஒப்பந்த நமுனா வழங்கப்படும்.
3. ஒப்பந்த நமுனாக்கள் கோரும் போது ஒப்பந்தக்காரர்கள் மேற்கண்டகருவி தளவாடங்கள் சொந்தமாக வைத்திருப்பதற்கான ஆவணங்கள்அளித்தால் மட்டுமேஒப்பந்தநமுனாக்கள் வழங்கப்படும்
4. நடப்பு ஆண்டு விற்பனை வரி செலுத்தியதற்கான நிலுவையில்லா சான்றிதழை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.
5. மேற்காணும் சாலைகள் மற்றும் வேலைகள் பற்றிய விபரங்களுக்கு மதுரை நெடுஞ்சாலை கோட்டப்பொறியாளரை தொடர்பு கொள்ளலாம்.

<u>முன் தகுதி காணலுக்கான குறைந்த பட்ச தகுதிகள் :</u>

1. ஒப்பந்தக்காரர்கள் அதே பெயரிலும் அதே ஒத்த தன்மையுடைய விவரங்களுடன் (Same Name and Style) கடந்த ஐந்தாண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரும் வேலையில் 40% மதிப்பிற்கு வருடாந்திர வேலை செய்து முடித்த அளவுடன் (Annual Turnover) அதாவது முன்னேற்றத்தில் உள்ள அல்லது செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியல் பெற்று சாதித்திருக்க வேண்டும்.

2. ஒப்பந்தக்காரர்கள் அதே பெயரிலும் அதே ஒத்த தன்மையுடைய விபரங்களுடன் (Same Name and Style) முதன்மை ஒப்பந்தக்காரர்களாக இருக்கும் பட்சத்தில் கடந்த ஐந்து வருடத்தில் தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் வேலையின் மதிப்பில் 40% அளவிற்கு நெடுஞ்சாலை சாலைப்பணி/அல்லது பாலப்பணி/விமான நிலையப் பணியில் ஒரு வேலையாவது முடித்திருக்க வேண்டும்.

3. கடந்து ஐந்து வருடங்களில் ஏதாவது ஒரு பணியில் தற்போது முன் தகுதி ஆவணங்கள் கேட்கப்பட்ட பணியின் ஒத்த தன்மையுடைய முக்கிய இனங்களில் (Major Items) 40% பணிகள் முடித்திருக்க வேண்டுமென்பது முன் அனுபவத்திற்காக எடுத்துக் கொள்ளப்படும்.

4. ஒப்பந்தக்காரர்கள் இவ்வேலையை முடிப்பதற்கு போதுமான கருவி தளவாடங்கள் வைத்திருக்க வேண்டும்.

5. ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்த வேலையை செயல்படுத்தும் வகையில் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பந்த தொகைக்கு நிகரான பொருள் திறன் (Bid Capacity) கொண்டவராக இருத்தல் வேண்டும்.

6. இணை முயற்சியுடன் (Joint Venture) கூடிய ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கண்காணிப்புப் பொறியாளர்,
(நெடுஞ்சாலை)
மதுரை - 2.

---

கண்காணிப்புப் பொறியாளருக்காக,
(நெடுஞ்சாலை)
மதுரை - 2.